மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.**N.**ரேணுகா**.,** பி.ஏ., பி.ல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்
2023 ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 5 ம் நாள் திங்கள்கிழமை

இடை மனு எண்.1/2022

அசல் வழக்கு எண்**.313/2017**

R.சேகர், தந்தை பெயர் ரெங்கசாமி, வயது சுமார் 34, வசிப்பிடம் நடுத்தோட்டம் கதவு எண்.301, காடுவெட்டி பாளையம் கிராமம், சூலூர் வட்டம், (முன்பு பல்லடம் வட்டம்), கோயம்புத்தூர் மாவட்டம்.

...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. கருப்புச்சாமி, தந்தை பெயர் சின்னியகவுண்டர், வயது சுமார் 48, வசிப்பிடம் நடுத்தோட்டம், காடுவெட்டி பாளையம் கிராமம், சூலூர் வட்டம், (முன்பு பல்லடம் வட்டம்), கோயம்புத்தூர் மாவட்டம்.

2. பாக்கியலட்சுமி, கணவர் பெயர் கருப்புச்சாமி, வயது சுமார் 43, வசிப்பிடம் நடுத்தோட்டம், காடுவெட்டி பாளையம் கிராமம், சூலூர் வட்டம், (முன்பு பல்லடம் வட்டம்), கோயம்புத்தூர் மாவட்டம்.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

தாவா பிராதில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள்: 01.12.2022

இந்த வழக்கானது 14.03.2023 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முருகசாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.S.விஜய்ஆனந்த், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>இறுதி உத்தரவு</u>

1. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல்</u>

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

திருத்தம் செய்ய வேண்டிய விவரம்

1. ஏற்கனவே திருத்தப்பட்ட பிராதில் 6-வது பாராவிற்கு அடுத்த "6A. மேற்படி தாவா தடமானது உட்பிரிவு செய்யப்படாத பழைய க.ச.எண்.92-ல் வடகோடாக 27.08.1921 ம் தேதிய பாகக்கிராலில் 1, 2 லக்கமிட்டவருக்கு பிரிந்த பு.ஏ.0.93 சென்ட் பூமியில் தெற்கோட்டில் கிழமேலாகவும் மேற்கோட்டில் தென்வடலாகவும் செல்கிறது. தாவா தடம் உள்ள பூமியானது எனது மூதாதையர்களுக்கு சொந்தமானது ஆகும். எனது தாத்தா கிருஷ்ணக்கவுண்டர் என்பவர்தான் தனக்கு பாகப்பிரிவினையில் பாத்தியப்பட்ட க.ச.எண்.92-ல் உள்ள சொத்தை கடந்த 04.11.1970-ம் தேதி 1-ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னியகவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரையத்திலேயே மேற்படி கிரைய சொத்தில் தெற்கோட்டில் கிழமேலாகவும் மேற்கோட்டில் தென்வடலாகவும் தடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பின்னிட்டு 1982-ல் உட்பிரிவு செய்யப்பட்ட போது பழைய க.ச.எண்.92-ல் வடகோடாக 27.08.1921-ம் தேதிய பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட பு.ஏ.0.93 சென்ட் பூமியானது ரீசர்வே படி 92/2 மற்றும் 92/1 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட 1-ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னிகவுண்டர் கிரையம் பெற்ற பின் ஏற்பட்ட உட்பிரிவில் க.ச.எண்.92-ல் கண்டுள்ள மொத்த விஸ்தீரணம் பு.ஏ.0.43 சென்ட்டில் தெற்கோட்டிலும் மேற்கோட்டிலும் செல்லும் பொது தடத்துக்கு FGH பகுதியில் பு.ஏ.0.11 சென்ட் ஒதுக்கியது போக மீதி பு.ஏ.0.32 சென்ட் பூமிக்கு தான் ரீ சர்வே எண்.92/2 என்ற எண் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ரீ சர்வே படி பிரிந்த பு.ஏ.0.32 சென்ட் விஸ்தீரணத்தை விட பொது தடமாக உள்ள FGH பகுதியையும் சேர்த்து அதிக விஸ்தீரண சொத்தை ஆக்கிரமித்து கம்பி வேலி அமைத்துள்ளார்கள்". என்று சேர்க்க வேண்டும்.

2023 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 5 ஆம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

Final order
IA.No.1/2022 in
OS.313/2017 in
Dated:05.06.2023
DMC, Sulur.